## எல்லையில் அகதிகளுக்கான உரிமைகள்

## *உங்களுடைய உரிமைகளை அறிந்திருங்கள் வழிகாட்டி - அகதியுரிமை கோருவதற்காக ஐக்கிய அமெரிக்க நாடுகளிலிருந்து கனடாவுக்கு வருகின்ற US குடியுரிமை அற்றவர்களுக்கானது.*

உங்களுக்கும் உங்களுடைய குடும்பத்தினருக்கும் பாதுகாப்பைத் தேடுகின்ற உரிமை உங்களுக்கு இருக்கின்றது. உங்களுடைய தீர்மானங்களுக்கு ஆதரவளிக்கும் தகவல்களை இந்த வழிகாட்டி உங்களுக்கு வழங்குகின்றது. இவை பொதுவான தகவல்கள், சட்டரீதியான ஆலோசனைகள் அல்ல. இங்கு வழங்கப்பட்டிருக்கும் தகவல்களுடன் மேலும் பல தனித்துவமான விபரங்களை நீங்கள் கருத்தில் கொள்ள வேண்டும், எனவே சாத்தியமாயின் ஒரு சட்டத்தரணியுடன் கதையுங்கள்.

Law Union of Ontario (ஒன்ராறியோ சட்ட அமைப்பின்) குடிவரவுச் சட்டக் குழு மற்றும் No One Is Illegal (ஏவரும் சட்ட விரோதமானவர்கள் அல்ல) எனப்படும் அமைப்புகளால் இந்த வழிகாட்டி தயாரிக்கப்பட்டுள்ளது. African-Canadian Legal Clinic (ஆபிரிக்க கனடிய சட்ட மையம்) இதற்கு ஆதரவளித்துள்ளது.

### <u>நுழைவிடம் (Port of Entry) ஒன்றின் ஊடாக வருதல்</u>

கனடாவுக்குள் சட்டரீதியாக நீங்கள் நுழையக்கூடிய இடம் ஒரு *நுழைவிடம்* எனப்படும். ஐக்கிய அமெரிக்க நாடுகளிலிருந்து வரும் நடைமாந்தர், பேருந்துகள், மிதிவண்டிப் பயணிகள், புகையிரதங்கள் மற்றும் மோட்டார் வாகனங்கள் கனடாவுக்குள் நுழைகின்ற இடம் **தரை நுழைவிடம்** எனப்படும். ஏனைய நுழைவிடங்களாக விமான நிலையங்களும் துறைமுகங்களும் இருக்கின்றன.

**சட்டபூர்வமான தரை நுழைவிடத்தில் வந்துசேர்பவர்களில் பலரை, கனடாவில் அகதிநிலை கோர முடியாமல் தடுக்கும் பாதுகாப்பான மூன்றாம் நாடு ஒப்பந்தம் (STCA)** எனப்படும் ஒரு ஒப்பந்தத்தில் கனடாவும் ஐக்கிய அமெரிக்க நாடுகளும் கையொப்பமிட்டுள்ளன.

**இந்தத் தடைக்கு மூன்று விதிவிலக்குகள் உள்ளன.** இந்த மூன்று நிலைமைகளிலும், தரை மூலமான ஒரு நுழைவாயிலில் நீங்கள் வந்து சேர்ந்தாலும், அகதியுரிமையைக் கோருவதற்கு நீங்கள் தகுதியுடையவராக இருக்கலாம்.

1) ஒரே பால் அல்லது எதிர்ப் பால் துணைவர், இணைந்துவாழும் பங்காளி, சட்ட பூர்வமான பாதுகாவலர் (கோரிக்கையாளர் 18 வயதுக்குட்பட்டவராயின்), பிள்ளை, பெற்றோர், சகோதரர், பேரர், பேரப்பிள்ளை, தாயின்/தந்தையின் சகோதரர், மருமகன்/பெறாமகன்/மருமகள்/பெறாமகள் போன்ற **குடும்பத்தவர்கள்,** உங்களுக்குக் **கனடாவில் இருந்தால்,** தரை மூலமான ஒரு நுழைவாயிலில் நீங்கள் வந்து சேர்ந்தாலும், அகதியுரிமையைக் கோருவதற்கு நீங்கள் தகுதியுடையவராக இருக்கலாம். ஆனால், குடும்ப அங்கத்தவர்கள் அனைவரும் தகமையுடையவர்கள் ஆக மாட்டார்கள்.

எல்லைக்கு நீங்கள் வரும்போது, உங்களுடைய குடும்ப அங்கத்தவர் **நாட்டில் இருக்கிறார்** என்றும் அவருக்குக் கனடாவில் **குடிவரவு நிலை இருக்கின்றது** என்றும் நுழையுடமிடத்தில் நீங்கள் குடிவரவு அதிகாரிக்கு நிரூபிக்க வேண்டும். கனடாவில் குடிவரவு நிலை என்றால், அவருடைய அகதிக் கோரிக்கை அல்லது வெளியேற்ற முன்பான ஆபத்து மதிப்பீடு வெற்றியடைந்திருக்கிறது அல்லது அவர் ஒரு நிரந்தரக் குடியிருப்பாளர் அல்லது ஒரு கனடியப் பிரஜை அல்லது அவரை வெளியேற்றும் கட்டளை நிறுத்தப்பட்டுள்ளது, அல்லது அவருக்கு வேலை செய்வதற்கான அல்லது படிப்பதற்கான அனுமதி இருக்கிறது அல்லது அவர் ஒரு அகதியுரிமைக் கோரிக்கையாளர், அத்துடன் அவருடைய கோரிக்கை இன்னும் செயலாக்கத்தில் உள்ளது என்பது கருத்தாகும். உங்களுடைய குடும்ப அங்கத்தவரின் தொடர்புத் தகவல்கள் உங்களுக்குத் தேவைப்படும் (உங்களுடைய குடும்ப அங்கத்தவரை அந்த அதிகாரி தொலைபேசியில் அழைத்து கேள்விகள் கேட்கக்கூடும்). உங்களுக்கும் அவருக்குமான உறவையும், கனடாவில் அவருடைய நிலையையும் உறுதிப்படுத்தும் பத்திரங்கள் உங்களுக்குத் தேவைப்படலாம்.

2) **தனியாகப் பயணிக்கும்** ஒரு **இளவயதினர்** ஆக நீங்கள் இருந்தால், தரை மூலமான நுழைவிடத்தில் நீங்கள் வந்து சேர்ந்திருந்தாலும்கூட, அகதியுரிமையைக் கோரக் கூடிய ஒருவராக நீங்கள் இருக்கலாம். நீங்கள் 18 வயதுக்கு உட்பட்டவராகவும், திருமணமாகாதவராகவும் இருப்பதுடன், பெற்றோருடன் அல்லது சட்டபூர்வமான பாதுகாவலருடன் நீங்கள் கனடாவுக்கு வரவில்லை, மேலும் கனடாவில் அல்லது U.S.ல் உங்களுடைய பெற்றோர் அல்லது சட்டபூர்வமான பாதுகாவலர் இல்லை என்பது இதன் கருத்தாகும்.

3) கனடாவுக்கு நீங்கள் வர அனுமதிக்கும், **செல்லுபடியாகும் நுழைவு அனுமதி அல்லது பயண ஆவணம்** அல்லது வேலைசெய்வதற்கான அல்லது கற்பதற்கான அனுமதிப்பத்திரம் இருந்தால், அல்லது கனடாவுக்கு வருவதற்கு நுழைவு அனுமதி உங்களுக்குத் தேவைப்படாத ஒரு நாட்டிலிருந்து நீங்கள் வந்திருந்தால், தரை மூலமான நுழைவிடத்தில் நீங்கள் வந்து சேர்ந்தாலும், அகதியுரிமையை நீங்கள் கோரக் கூடியதாக இருக்கலாம்.

**விமானத்தில் அல்லது படகில்** நீங்கள் வந்திருந்தால், **STCAன் கீழ் உங்களுக்கு விலக்களிக்கப்பட மாட்டாது.** அத்துடன் U.S.ல் அகதி நிலை மறுக்கப்பட்டு, அங்கிருந்து வெளியேற்றப்பட்ட பின்னர் கனடாவுக்கு ஊடாகப் போக்குவரத்துச் செய்பவராக நீங்கள் இல்லாமல் *இருந்தால்,* அகதியுரிமைக்கான விண்ணப்பத்தை நுழைவிடத்தில் நீங்கள் ஆரம்பிக்கக் கூடியதாக இருக்கும்.

## <u>நுழைவிடத்தில் அகதியுரிமை கோரல்</u>

STCA விதிவிலக்குகள் காரணமாக, கனடாவுக்குள் நீங்கள் அனுமதிக்கப்பட்டால் அல்லது விமானநிலையத்தில் அல்லது துறைமுகத்தில் நீங்கள் வந்துசேர்ந்தால், அந்த நுழைவிடத்தில், அகதியுரிமைக் கோரிக்கைக்கு நீங்கள் விண்ணப்பிக்க ஆரம்பிக்கலாமா (**அகதியுரிமைக் கோரிக்கை** ஒன்றைக் கோருவதற்கான தகுதி) எனத் தீர்மானிக்கும் **அலுவலர் ஒருவர்** உங்களை **நேர்காணல் செய்வார்.**

நீங்கள் அகதியுரிமையைக் கோருவதற்கு அந்த அலுவலர் உடனடியாக அனுமதிக்கலாம் அல்லது கனடாவுக்குள் உங்களை அனுமதிப்பதுடன் நேர்காணலுக்காக இன்னொரு நாள் திரும்பி வரும்படி உங்களிடம் கேட்கலாம். மேலதிக தகவல்களைச் சேகரிப்பதற்காக, அந்த அலுவலர் உங்களைத் தடுப்புக்காவலில் (சிறை) வைக்கவும் முடியும்.

அகதியுரிமை கோருவதற்கு உங்களுக்கு அனுமதி இல்லாமல் இருப்பதற்கான சில காரணங்கள் ஆவன (1) நீங்கள் திரும்பிப் போகக்கூடிய, இன்னொரு நாட்டில் அகதி அந்தஸ்து உங்களுக்கு இருக்கிறது, அல்லது (2) கனடாவில் ஏற்கனவே நீங்கள் அகதியுரிமையைக் கோரி, அது மறுக்கப்பட்டுள்ளது, அல்லது திரும்பப் பெறப்பட்டுள்ளது அல்லது கைவிடப்பட்டுள்ளது, அல்லது அதைத் தொடர்வதற்கு அனுமதி இல்லை, அல்லது (3) நீங்கள் 'அனுமதிக்கப்பட முடியாதவர்' எனக் கருதப்படுகிறீர்கள் அத்துடன் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாக இருப்பவர் அல்லது பாரதூரமான குற்றங்கள் செய்தவர் எனக் கண்டறியப்பட்டிருக்கிறீர்கள்.

அகதியுரிமை கோருவதற்கு உங்களை அந்த அலுவலர் அனுமதித்தால், ஆரோக்கியப்

பராமரிப்பு மற்றும்/அல்லது சமூக உதவிப்பணம் (welfare) பெற்றுக்கொள்வதற்கு, நீங்கள் பாவிக்கக்கூடிய **அகதிக் கோரிக்கையாளர் பாதுகாப்புப் பத்திரம் (Refugee Protection Claimant Document** உங்களுக்கு வழங்கப்படும். அத்துடன் வேலை செய்வதற்கான அனுமதிக்கும் நீங்கள் விண்ணப்பிக்கக் கூடியதாக இருக்கலாம்.

**கோரிக்கையின் அடிப்படைகள்** (**Basis of Claim)** எனப்படும் முக்கியமான படிவமும் உங்களுக்குத் தரப்படலாம். தயாராக இருங்கள். இந்தப் படிவத்தைப் பூர்த்திசெய்த பின்னர், அதைக் குடிவரவு மற்றும் அகதிச் சபைக்கு (Immigration and Refugee Board) **15 நாட்களுள்** வழங்குவதை நீங்கள் உறுதிசெய்ய வேண்டும். உங்களால் நிரப்ப முடியாவிட்டால், உதவி பெறுங்கள். அத்துடன் உங்களுடைய கோரிக்கை பற்றிய அனைத்துத் தகவல்களையும் உள்ளடக்குவதை உறுதிசெய்யுங்கள்.

## <u>வழமையான நுழைவிடங்கள் அன்றிய வேறு இடங்களில் கனடாவுக்குள் புகுதல்</u>

அனேகமானோர் தரை மூலமாகக் கனடாவுக்கு வருகின்றனர், ஆனால் நுழைவிடம் ஒன்றின் ஊடாகவோ அல்லது உத்தியோகபூர்வமான எல்லையின் ஊடாகவோ அல்ல. **இது "சட்ட விரோதமானது" அல்ல, ஆனால் நீங்கள் தடுத்து வைக்கப்படலாம்.** கனடாவுக்குள் வந்த பின்னர், காவல்துறையினரின் பாதுகாப்பின் கீழ் அல்லது கனடிய குடிவரவுச் செயலாக்கத்தின் கீழ் நீங்கள் செல்ல வேண்டியிருந்தால், உங்களுடைய நாட்டில் உங்களுக்கு ஆபத்து இருப்பின், அதை உடனடியாக அவர்களுக்குக் கூறுங்கள்.

கனடாவுக்குள் நீங்கள் வந்ததும், கனடா எல்லை சேவை முகவர் நிலையம் (Canada Border Services Agency) அல்லது குடிவரவு, அகதிகள் மற்றும் குடியுரிமை கனடா (Immigration, Refugees, and Citizenship Canada) அலுவலகம் ஒன்றின் (www.cic.gc.ca) அலுவலர் ஒருவரிடம் சட்டப்படி நீங்கள் அகதியுரிமையைக் கோர முடியும்.

இந்த அலுவலகத்தில் ஒரு கட்டுப் படிவங்கள் உங்களுக்கு வழங்கப்படும். இந்தப் படிவங்களைப் பூர்த்திசெய்து கொண்டு இந்த அலுவலகத்துக்கு நீங்கள் திரும்பி வரும்வரைக்கும், ஆரோக்கியப் பராமரிப்பையோ, சமூக சேவைகளையோ நீங்கள் பெறமுடியாது. அத்துடன் வேலைசெய்வதற்கான அனுமதிப் பத்திரத்துக்கு நீங்கள் விண்ணப்பிக்கவும் முடியாது. **இது நாட்டுக்குள் கோரல் (in-land claim) என அழைக்கப்படும்.** இந்தப் படிவங்கள் உங்களுடைய கோரிக்கையின் அடிப்படையாக இருக்கப் போவதாலும், உங்களுடைய அகதியுரிமைக் கோரிக்கை பற்றித் தீர்மானமெடுக்கும் தீர்மானமெடுப்பவரால் இவை பார்வையிடப்படும் என்பதாலும் இவற்றைக் கவனமாகத் தயாரியுங்கள்.

**<u>உங்களைப் பாதுகாத்தல்</u>**

கனடிய குடிவரவுச் செயலாக்க அதிகாரிகளுக்கும் (கனடா எல்லை முகவர் நிலையம்), சிலவேளை காவல்துறையினருக்கும் நீங்கள் சொல்பவை யாவும், உங்களுடைய அகதிக் கோரிக்கைக் கோப்பின் ஒரு பகுதியாக மாறும், அத்துடன், பின்னர் உங்களுடைய அகதியுரிமை வழக்கு விசாரணையின் போது அது பற்றி உங்களிடம் கேள்விகள் கேட்கப்படலாம். உங்களுடைய சொந்த நாட்டுக்குத் திரும்பிப் போவதற்கு ஏன் பயப்படுகிறீர்கள் என்பது பற்றி முடியுமானளவு விபரங்களை உள்ளடக்குவதற்கு முயற்சியுங்கள். வழங்கப்பட்ட தகவல்கள் பொய்யானவை எனக் கண்டறியப்படல் அல்லது உங்களுடைய பதில்களிலுள்ள விடயங்களை விட்டுவிடுதல் என்பன, பின்னர் வழக்கின்போது உங்களுடைய கதையின் நம்பகத்தன்மையைப் பாதிக்கக்கூடும்.

உங்களுடைய படிவங்கள் மற்றும் உங்களுடைய அகதி விண்ணப்பத்தைப் பூர்த்திசெய்ய உதவுவதற்கு ஆலோசகர் (ஒரு சட்டத்தரணி அல்லது உரிமம் பெற்ற குடியேற்ற ஆலோசகர்) ஒருவரை நீங்கள் பெற்றுக்கொள்ள வேண்டும். மோசமான முறையில் செயல்படும் சட்டத்தரணிகள் மற்றும் குடிவரவு ஆலோசகர்கள் உள்ளனர், எனவே நம்பகமான ஆதாரவளங்களிலிருந்து அல்லது சமூக நிறுவனம் ஒன்றிடமிருந்து ஆலோசகர்களின் பெயர்களைப் பெற முயற்சி செய்யுங்கள். பயணம்செய்வதற்கு முன்னர் சட்டத்தரணி ஒருவருடன் கதைப்பதற்கும் முயற்சி செய்ய வேண்டும். கனடாவுக்குள் வந்ததும், Legal Aid (சட்ட உதவி) எனப்படும் திட்டம் ஊடான இலவசமான சட்ட உதவிக்கு நீங்கள் தகுதியுடையவராக இருக்கலாம்.

எல்லையைக் கடப்பதற்கு உங்களுக்கு உதவி செய்பவர், தன்னுடைய உதவிக்கு பணம் பெற்றால், குற்றவியல் அல்லது குடிவரவு தொடர்பான குற்றச்சாட்டுகளுக்கு முகம்கொடுக்க வேண்டியிருக்கலாம். எல்லையைக் கடப்பதற்கு உதவி செய்பவர்கள், வழங்கும் அந்த உதவி முற்றிலும் மனிதாபிமான அடிப்படையிலானது, அதனால்

அவர்களுக்கு எந்தவிதமான "பொருள் நன்மையும்" இல்லை என்பது உறுதி செய்யப்பட வேண்டும். அகதிகள் கனடாவுக்கு வருவதற்கு உதவுபவராக நீங்கள் இருந்தால், சட்ட ஆலோசனைப் பெற்றுக்கொள்ளுங்கள்.

கனடாவில், வரைபடங்கள், குடியிருப்பு வசதி, அல்லது ஆதரவு இல்லாமல், மிகவும் ஒதுக்கப்பட்ட ஒரு இடத்தில் நீங்கள் விடப்பட்டிருக்கலாம். குளிர்காலத்தில் (கனடாவின் சில பகுதிகளில் அக்டோபரிலிருந்து ஏப்ரல் வரை) எவ்வளவு நேரம் என்றாலும், நீங்கள் வெளியே இருந்தால், தீவிர ஆரோக்கியப் பிரச்சினைகளால் பாதிக்கப்படுவதற்கான சாத்தியம் மிகவும் அதிகமாக இருக்கின்றது. அதிகமான குளிர்கால ஆடைகள், உணவு, நீர் மற்றும் கை மற்றும் கால்களைச் சூடாக வைத்திருக்கும் பொருள்களைக் கொண்டு வாருங்கள். உங்களுடைய கைத்தொலைபேசியைக் கொண்டு வாருங்கள். அத்துடன் அலையல் வசதி (roaming) உள்ள பகுதிகளில் அழைப்புகள் செய்ய முடியும் என்பதை உறுதிசெய்யுங்கள். பெரும்பாலான அவசரகால சந்தர்ப்பங்களில், கனடாவில் 911ஐ நீங்கள் அழைக்கலாம், ஆனால், இதன்போது காவல்துறையினரும் வரக்கூடும்.

கனடாவில் அகதியுரிமை நடைமுறை பற்றிய மேலதிக தகவல்களை இங்கே பெற்றுக்கொள்ளுங்கள்: http://refugee.cleo.on.ca/en/refugee-claim-flowchart

இதனை தரவிறக்கம் செய்வதுடன் பரவலாக மீளப் பதியுங்கள். கேள்விகள்? தயவுசெய்து மின்னஞ்சலிடுங்கள்: nooneisillegal@riseup.net.

இந்த சட்டரீதியான வழிகாட்டி, அகதியுரிமைக் கோரிக்கையாளர்கள் முகம்கொடுக்கும் ஆதிக்கமுள்ள சட்ட அமைப்பான கனடிய அகதிச் சட்டத்துடன் மட்டுப்படுத்தப்பட்டதாக உள்ளது. கனடா பழங்குடி மக்களின் நாடாகும் என்பதை புதிய குடிவரவாளர்கள் விளங்கிக்கொள்ள வேண்டும் என்பதை நாங்கள் வலியுறுத்துகின்றோம்.